**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 47/2016**

DW2 – ஆதிமூலம், த/பெ. பெரியசாமி
நாள்–16.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வழக்கு சொத்து என்ன புல எண் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரனம் என்றால் சுமார் 200 குழி இருக்கும். தாவா சொத்து என்பது ரைஸ்மில் இருந்து தற்போது புஞ்யாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மூன்று பக்கமும் தர்மாம்மாள் நஞ்சை உள்ளது என்றால் சரிதான். தென்புறம் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து என்பது ஷேக்தாவுத் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். ஷேக்தாவுத் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஷேக்தாவுத்தின் மனைவி பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஷேக்தாவுத்திற்கு எத்தனை மனைவிகள் என்றால் மூன்று மனைவிகள். மூன்று மனைவிகளின் பெயர்கள் தெரியாது என்றால் சரிதான். மூன்று மனைவிகள் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

ஷேக்தாவுத் எப்போது இறந்தார் என்றால் எனக்கு நினைவில்லை. ஷேக்தாவுத்தின் மனைவிகள் எப்போது இறந்துபோனார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ரைஸ்மில்லில் எனக்கு முன்பு ஆச்சாள்புரத்தை சேர்ந்த கலியபெருமாள் என்பவர் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. கலியமாளுக்கு முன்பு மூன்பேர் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதே ஊரை சேரந்த வீரப்பிள்ளை என்பவர் வேலை செய்து வந்தார். வீரப்பிள்ளை என்பவர் ரைஸ்மிலில் எத்தனை ஆண்டுகளாக வேலை

செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வீரப்பிள்ளைக்கு பிறகு யார்யார் ரைஸ்மில் டிரைவராக வேலை செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை வயதில் ரைமில் டிரைவராக பணிக்கு சேர்ந்தேன் என்றால் சுமார் 25 வயதில் பணிக்கு சேர்ந்தேன். எனக்கு கடைகன்விநாயகநல்லூர் கிராமத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தில் சிறு கொட்டகை அமைத்து நான் ரைஸ்மில் டிவைராகவும் மற்றும் இரவு காவலராகவும் தங்கி பணி புரிந்து வந்தேன் என்றால் சரிதான். நல்லவிநாயகபுரம் ஊராட்சிக்கு உட்பட்டு கடைகன்விநாயகநல்லூர், மயிலக்கோயில், தன்டேசநல்லூர் ஆகிய உட்கிராமங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் குடும்பத்துடன் கடைகன்விநாயகநல்லூர் சிவன்கோயில் தெருவில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக வாதிகள் என்னென் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. ஷேக்தாவுத்தின் வாரிசு சான்று வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஷேக்தாவுத்தின் சகோதரர்கள் எத்தனைபேர் என்றால் இரண்டு பேர் அவர்கள் முகமது காசிம், லாகாமரைக்கார் ஆகியோர்கள் ஆவார்கள்.

ஷேக்தாவுத்தின் சகோதரர்கள் எப்போது இறந்து போனார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஷேக்தாவுத் எந்த வருடம் இறந்துபோனார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா யாரர் போட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்ற தெரியாது என்றால் தெரியாது. தாவா சொத்தில் இருந்த ரைஸ்மிலில் போடப்பட்டுள்ள கொட்டகையையும் வைகோர்போரையும் யார் கொளித்தினார் என்றால் தெரியாது ஆனால் 35 ஆண்டுகளுக்கு முன்பு கொளித்தினார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொட்டகை எரிந்துபோனதாக சொல்வதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வதும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2006–ம்

ஆண்டு வாக்கில் ரைஸ்மில் தொழில் நசிந்து போனது என்றால் சரிதான். ரைஸ்மிலில் இருந்த இயந்திரங்களை நாங்களே சிறிது சிறிதாக பிரித்து விற்பனை செய்து விட்டோம் என்றால் சரியல்ல. வாதிகள்தான் பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள். வாதிகளில் யார் என்றால் 2-ம் வாதி ஆவார். ரைஸ்மில் கட்டிடம் தானாக இடிந்துவிட்டதா என்றால் ஆமாம். இடிந்துபோன கட்டிடத்தின் பாகங்கள் இன்றும் அப்படியேதான் உள்ளது.

தாவா சொத்தில் நெல் காயவைப்பதாற்கான சிமெண்ட்களம் தற்போது உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு பகுதியில் தான் நான் கூறை வீடு கட்டி வசித்து வருகிறோம். சிமெண்ட் களத்திற்கு வடபுறம் ரைஸ்மில் உபயோகத்திற்கான மேல்நிலை நீர்தேக்க தொட்டி உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்புறத்தில் மூங்கில்குத்துக்கள் உள்ளது என்றால் உள்ளது. அத்துடன் இரண்டு தென்னை மரமும், ஒரு அரச மரமும் உள்ளது. தாவா சொத்தில் கிணறும் தற்போது உபயோகத்தில் இல்லாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

தாவா சொத்தில் நான் குடியிருந்து வந்த கூறை வீடு தற்சமயம் இரும்பு ஷீட்கொண்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருந்து வருவதற்கு ஷேக்தாவுத் குடும்பத்தாரின் அனுமதியின்பேரில் தான் நான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். வாதிகள் சுவாதீனப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விபரத்தை நான் தெரிந்துகொள்வில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு உரிமையானது என்று நான் எதிர்வழக்காடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கூறை வீடு 35 ஆண்டுகளுக்கு முன்பு தீயில் எரிந்து விட்டதாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

பி.சா.ஆ.1 வரிசையில் ஆவணங்களில் கடைகன்விநாயகநல்லூர் என குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2-க்கான மின் இணைப்பு எந்த ஆண்டு பெறப்பட்டது என்றால் நினைவில்லை. ஷேக்தாவுத்

குடும்பத்தாரின் அனுமதியின் பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். எனக்கு நஞ்சை நிலம் உள்ளதா என்றால் 4 மா உள்ளது. அந்த நிலம் எங்கு உள்ளது என்றால் தர்மாம்மாள் நிலத்திற்கு வடக்கு பக்கத்தில் உள்ளது. அந்த நிலத்திற்குண்டானது தான் பி.சா.,ஆ.3 ஆவணம் என்றால் சரிதான். கடைகன்விநாயகநல்லூர் சிவன்கோயில் தெருவில் உள்ள வீட்டிற்கான தொலைபேசி இணைப்பிற்காக செலுத்திய ரசீதுகள் தான் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 வரிசை என்றால் சரிதான். ரைஸ்மிலிலும் தொலைபேசி இணைப்பு இருந்தது. ரைஸ்மிலில் தொலைபேசி இணைப்பு இருந்ததற்கான எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான்.

பி.சா.ஆ.6–ம் கடைகன்விநாயகநல்லூர் சிவன்கோவில் தெருவில் உள்ள வீட்டிற்கானது என்றால் சரிதான். பி.சா.ஆ.7–ன்படி வீடு ஏதும் புதிதாக கட்டப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ஆவணத்தின் புகைபடத்தில் உள்ள கூறை வீடுதான் எரிந்துபோன கூறைவீடு என்றால் சரிதான். 1980–ல் இருந்து ரைஸ்மிலில் டிரைவராக வேலை பார்த்தது பொய் என்றால் சரியல்ல. 2003–ம் ஆண்டுதான் ரைஸ்மில்லுக்கான கடைசி டிரைவராக வந்து சேர்ந்தேன் என்றால் சரியல்ல. 1980–லிருந்து நான் தாவா சொத்தில் வசித்து வருவதற்காக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7–ஐ தவிர இதர ஆவணங்கள் கடைகன்விநாயகநல்லூர் சிவன்கோயில் தெருவில் உள்ள வீட்டிற்கானது என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் சட்டபட்டியான உரிமையாளர் யார் என்று தெரிந்தால் தாவா சொத்தை ஒப்படைப்படைப்பத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் பொய்யாக எதிர்வழக்காடி வருகிறேன் என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**